**சுருக்கம்**

கலையும் பண்பாடும் – நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2012–2013 ஆம் ஆண்டிற்கான நிதியுதவி பெற தெரிவு செய்யப்பட்ட 500 நலிந்த கலைஞர்களின் பெயர் பட்டியலுக்கு ஒப்புதல் அளித்தல்- ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண்.2) த்துறை**

அரசாணை (நிலை ) எண். 79 நாள். 25.04.2013

திருவள்ளுவர் ஆண்டு 2044, விஜய, சித்திரை 12

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.56, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2)த்துறை, நாள்: 21.03.2013.
2. கலை பண்பாட்டு இயக்கக ஆணையரின் கடிதம் ந.க.எண்.3117/ஈ2/2011, நாள்26.03.2013.
3. அரசாணை (நிலை) எண்.61, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2)த்துறை, நாள்: 28.03.2013.

**********

**ஆணை:-**

நலிந்த நிலையில் வாழும் சிறந்த வயோதிக கலைஞர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தினை அரசு செயற்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின்படி, நிதியுதவி பெற்று வரும் கலைஞர் இயற்கை எய்திவிட்டால், அவருடைய மரபுரிமையரான மனைவி / கணவருக்கு இந்நிதியுதவி மாற்றி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், தெரிவு செய்யப்படும் நலிந்த கலைஞர்களுக்கு திங்கள்தோறும் நிதியுதவியாக ரூ.1000/– வழங்கப்பட்டு வருகிறது.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், நலிந்த நிலையில் வாழும் சிறந்த வயோதிக கலைஞர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் 2012–2013 ஆம் நிதியாண்டில் கூடுதலாக 500 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்க கலைஞர்களை தெரிவு செய்ய தெரிவுக்குழு ஒன்று அமைத்து அரசு ஆணையிட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2012–2013 ஆம் நிதியாண்டில் கூடுதலாக 500 நலிந்த கலைஞர்களுக்கு 01.03.2013 முதல் மாதந்தோறும் ரூ.1000/–(ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) வீதம் அவர்தம் வாழ்நாள் வரையிலும் நிதியுதவி அளித்திட ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அதற்கென 2012–2013 ஆம் ஆண்டு செலவினமாக ரூ.5.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. நலிந்த கலைஞர்களின் நிதியுதவி திட்டத்தின் கீழ் பயனாளிகளை தேர்ந்தெடுக்க நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகள் / வழிமுறைகள் தவறாது பின்பற்றப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்க, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட உள்ள தொகையைப் பெற்று, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கிட கலைப் பண்பாட்டு இயக்கக ஆணையருக்கு அனுமதி அளித்தும் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

5. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைப்படி அமைக்கப்பட்ட தெரிவுக்குழு தெரிவு செய்து அக்குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 2012–2013 ஆம் ஆண்டிற்கான 500 நலிந்த கலைஞர்களின் பெயர்ப் பட்டியலை (இணைப்பு–I) மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு அனுப்பி வைத்து அவர்களுக்கு நிதியுதவி வழங்க உரிய அரசாணையை வழங்குமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

6. கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் பரிந்துரையை அரசு கவனமுடன் பரிசீலித்து, பின்வருமாறு ஆணையிடுகிறது :-

அ) மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி அமைக்கப்பட்ட தெரிவுக் குழு தெரிவு செய்து அக்குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டு கலை பண்பாட்டுத் துறை ஆணையரால் பரிந்துரை செய்யப்பட்ட இணைப்பு–I ல் உள்ள 2012–2013 ஆம் ஆண்டிற்கான 500 நலிந்த கலைஞர்களின் பெயர்ப் பட்டியலை அரசு ஏற்றுக்கொண்டு, அப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 500 நலிந்த கலைஞர்களுக்கு 01.03.2013 முதல் மாதந்தோறும் ரூ.1000/–(ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) வீதம் அவர்தம் வாழ்நாள் வரையிலும் நிதியுதவி அளித்திட ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

ஆ) மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் அனுமதி அளிக்கப்பட்டவாறு, இணைப்பு–I-ல் உள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 500 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்க, இணைப்பு II–ல் குறிப்பிடப்பட்டவாறு ஒவ்வொரு மாவட்டத்திற்குமான ஒதுக்கீடு தொகையைப் பெற்று, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கலைப் பண்பாட்டு இயக்கக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இ) இணைப்பு–I-ல் உள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 500 நலிந்த கலைஞர்களுக்கு இவ்வரசாணையை இணைப்பு–III-ல் உள்ள படிவத்தின்படி பூர்த்தி செய்து அஞ்சல் வழியில் அனுப்பிடுமாறு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர்–செயலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. நிதியுதவி அனுமதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும், நிதியுதவியினை வழங்குவதற்குரிய கொடுப்பாணையினை (Authorisation) வழங்குமாறு தமிழ்நாடு மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –18 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணையின் இணைப்பு–I-ல் குறிப்பிட்டுள்ள கலைஞர்கள், நிதிநிலையில் முன்னேற்றம் அடைந்துள்ளனரா அல்லது அவர்களில் எவரேனும் இயற்கை எய்தினரா என்பது குறித்த அறிக்கை ஒன்றினை ஆண்டுதோறும் கலை பண்பாட்டு இயக்கக ஆணையர்,சென்னை–8 அவர்களுக்கு அனுப்பிவைக்குமாறு மாவட்டஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

9. இவ்வாணையின் இணைப்பு–I-ல் குறிப்பிடப்பட்டுள்ள நலிந்த கலைஞர்களுக்கு முழுமையாக நிதியுதவி அளிக்கப்பட்ட விவரத்தினை தக்க தருணத்தில் அரசுக்கு தெரிவிக்குமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ரா.கண்ணன்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர், (மு.கூ.பொ.)
கலை பண்பாட்டுத் துறை, சென்னை – 8.
உறுப்பினர்–செயலாளர்,
தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை –28.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
மாநில கணக்காய்வுத் தலைவர், (கணக்குகள்), சென்னை –9/18.
சம்பளக் கணக்கு அலுவலர், (கிழக்கு/தெற்கு/வடக்கு),சென்னை –5/35/79.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9 / மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை –6.
**நகல்**
ஆளுநரின் செயலாளர், ஆளுநர் அலுவலகம், கிண்டி, சென்னை –25.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை –9.
முதுநிலை நேர்முக உதவியாளர்,
பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அலுவலகம்,
சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
சுற்றுலா,பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை –9.
நிதி (கல்வி II/வ.செ.பொ.I/ வ.செ.பொ.II), சென்னை – 9.
தொழில்நுட்ப இயக்குநர், தேசிய தகவல் மையம், சென்னை –9.
பதிவாளர், தமிழ்நாடு தகவல் உரிமை ஆணையம், தேனாம்பேட்டை,
சென்னை – 18.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்

**இணைப்பு–II**

**அரசாணை(நிலை) எண்.79, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண்–2) துறை, நாள் 25.4.2013**

**2012–2013 ஆம் நிதியாண்டில் தெரிவு செய்யப்பட்ட 500 நலிந்த கலைஞர்களுக்கு மார்ச் 2013 –ல் நிதியுதவி வழங்கும் விவரம்**

| வ.எண் | மாவட்டங்களின் பெயர் | நிதியுதவி வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | சென்னை | 17 | 1x1000 | 17000 |
| 2. | காஞ்சிபுரம் | 21 | 1x1000 | 21000 |
| 3. | திருவள்ளூர் | 7 | 1x1000 | 7000 |
| 4. | வேலூர் | 41 | 1x1000 | 41000 |
| 5. | திருவண்ணாமலை | 29 | 1x1000 | 29000 |
| 6. | விழுப்புரம் | 34 | 1x1000 | 34000 |
| 7. | கடலூர் | 27 | 1x1000 | 27000 |
| 8. | தஞ்சாவூர் | 20 | 1x1000 | 20000 |
| 9. | நாகப்பட்டினம் | 8 | 1x1000 | 8000 |
| 10. | திருவாரூர் | 10 | 1x1000 | 10000 |
| 11 | திருச்சிராப்பள்ளி | 30 | 1x1000 | 30000 |
| 12 | பெரம்பலூர் | 10 | 1x1000 | 10000 |
| 13 | அரியலூர் | 14 | 1x1000 | 14000 |
| 14 | புதுக்கோட்டை | 3 | 1x1000 | 3000 |
| 15 | கரூர் | 10 | 1x1000 | 10000 |
| 16 | சேலம் | 32 | 1x1000 | 32000 |
| 17 | நாமக்கல் | 18 | 1x1000 | 18000 |
| 18 | தர்மபுரி | 22 | 1x1000 | 22000 |
| 19 | கிருஷ்ணகிரி | 11 | 1x1000 | 11000 |
| 20 | திருப்பூர் | 2 | 1x1000 | 2000 |
| 21 | ஈரோடு | 5 | 1x1000 | 5000 |
| 22 | கோயம்புத்தூர் | 9 | 1x1000 | 9000 |
| 23 | மதுரை | 28 | 1x1000 | 28000 |
| 24 | தேனி | 11 | 1x1000 | 11000 |
| 25 | திண்டுக்கல் | 15 | 1x1000 | 15000 |
| 26 | இராமநாதபுரம் | 9 | 1x1000 | 9000 |
| 27 | சிவகங்கை | 9 | 1x1000 | 9000 |
| 28 | விருதுநகர் | 9 | 1x1000 | 9000 |
| 29 | திருநெல்வேலி | 17 | 1x1000 | 17000 |
| 30 | தூத்துக்குடி | 14 | 1x1000 | 14000 |
| 31 | கன்னியாக்குமரி | 8 | 1x1000 | 8000 |
| | **மொத்தம்** | **500** | | **500000** |

ரா.கண்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

**இணைப்பு –III**

**அரசாணை(நிலை) எண்.79, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண்–2) துறை, நாள் 25.4.2013**

**………………………………… மாவட்டம்**

**நலிந்த கலைஞரின் பெயர் மற்றும் முகவரி**

**ரா.கண்ணன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்**

// உண்மை நகல்//

**பிரிவு அலுவலர்**